Source: Tamil Murasu, p3
Date: 14 December 2018

# சிறு வர்த்தகர்களுக்கு அதிக பயனளித்து வரும் மின்னிலக்க பணப்பை வசதி

டிபிஎஸ் 'பேலா!' போன்ற மின்னிலக்க பணப்பை (மொபைல் வேலட்) வசதிகளின் அறிமுகத்தால் திறன்பேசிகள் வழி பணம் செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதன்மூலம் சிறு வர்த்தகர்கள் அதிகம் பயனடைந்து வருகின்றனர் என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் வர்த்தகப் பள்ளி மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் டிபிஎஸ் 'பேலா!' வசதி அறிமுகப் படுத்தப்பட்டபின் திறன்பேசி வழி பணம் செலுத்துவது இரட்டிப்பாகி உள்ளதாக அந்த ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. குறிப்பாக, நூறு வெள்ளிக்குக் குறைவாகப் பணம் செலுத்த 'பேலா!' போன்ற மின்னிலக்கப் பணப்பை வசதியை சிங்கப்பூரர்கள் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

மின்னிலக்கப் பணப்பை வசதிகளின் மூலம் நூறு வெள்ளிக்கும் குறைவாக மேற்கொள்ளப்படும் வாராந்திர பணப் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை 114 விழுக்காடும் நூறு வெள்ளிக்கும் மேல் செய்யப்படும் பணப் பரிவர்த்தனைகள் 88 விழுக்காடும் அதிகரித்துள்ளன.

அதேபோல, 'பேலா! கியூஆர்' குறியீடு தொழில்நுட்பம் அறிமுகப் படுத்தப்பட்டபின் சிறு வர்த்தகர்களுக்கான கடன், பற்று அட்டைகள் விற்பனையும் ஏற்றம் கண்டுள்ளதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

2016 ஜனவரி முதல் 2017 டிசம்பர் வரை நடத்தப்பட்ட அந்த ஆய்வில் 45,000த்திற்கும் மேற்பட்ட வர்த்தகர்களிடம் பயனீட்டாளர்கள் மேற்கொண்ட பணப் பரிவர்த்தனைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

பிரபல உள்ளூர் வங்கி ஒன்றின் வழியாக 250,000 பயனீட்டாளர்கள் மேற்கொண்ட வங்கி நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இருந்தாலும், விற்பனையை அதிகரிக்க 'பேலா!' மின்னிலக்க பணப்பை வர்த்தகர்களுக்குக் கைகொடுத்ததா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

"மின்னிலக்க பணப்பை மூலம் பணம் செலுத்துவது அதிகரித்து வருவது 'ரொக்கமில்லாச் சமுதாயம்' என்ற சிங்கப்பூரின் இலக்கை அடைவதில் முக்கிய பங்காற்றும்," என்றார் ஆய்வுக்கு தலைமையேற்ற பேராசிரியர் சுமித் அகர்வால்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.